## 129. எத்தனை திரள் என் பாவம்

### பல்லவி

எத்தனை திரள் என் பாவம்
அத்தனையும் மன்னித்திரே
எத்தனை திரள் என் துரோகம்
அத்தனையும் மறந்திட்டிரே

### அனுபல்லவி

இயேசய்யா இயேசய்யா – 3
என்னை உம்மிடத்தில் சேர்த்துகொண்டீர்

### சரணங்கள்

1. யூதாஸை போல காட்டி கொடுத்தேன்
   கடிந்துகொள்ளமால் சிநேகிதனே என்றீர்
   - இயேசய்யா

2. பேதுருவைப்போல மறுதலித்தேன்
   மனந்திரும்ப வாய்ப்பை தந்தீர்
   - இயேசய்யா

3. தோமாவை போல சந்தேகப்பட்டடேன்
   உந்தன் காயங்களால் சுகம் தந்தீர்
   - இயேசய்யா

4. சீஷர்கள் போல ஓடியே போனேன்
   திரும்ப அழைத்து உயிர்ப்பித்தீர்
   - இயேசய்யா